தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 06.08.2026</u>

## <u>முன்னிலை</u>

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 2986/SCIC/2025</u>**

திரு.க.நாகராஜு த/பெ.கணபதி - புகார்தாரர்
எண்.1/97, நடுத்தெரு
கொல்லங்கிணறு அஞ்சல்
ஒட்டநத்தம் - வழி
தூத்துக்குடி - 628 302
Phone:88259 27661.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
திருநெல்வேலி - 627 002.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **03.05.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.05.2025 & 04.06.2025 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 21.06.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 03/05/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ துணை பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், திருநெல்வேலி மண்டலம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "திருநெல்வேலி துணை பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 2(J)-ன்படி பார்வையிட்டு கள ஆய்வு தொடர்பாக - ந.க.எண்.7190/அ4/2024, ந.க.எண்.6319/ஆ3/அ4/2024, ந.க.எண்.3680/அ1/2023, ந.க.எண்.4780/2023, ந.க.எண்.1571/அ4/2024 - தேவைப்பட்டால் தொடர்புடைய தன் பதிவேடுகளையும் கள ஆய்வு செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.க.நாகராஜு அவர்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.த.சுவாமிநாதன், துணைப் பதிவுத்துறைத் தலைவர், திருநெல்வேலி மண்டலம் அவர்கள் ஆஜரானார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான 03/05/2025 தேதியிட்ட மனுவின் வாயிலாக, பிரிவு 2(j)-ன் கீழ் சில கோப்புகளை / ஆவணங்களைக் குறிப்பிட்டு அதனை பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டுமென்று கோரியதன் அடிப்படையில், மனுதாரருக்கு அனுமதி வழங்கி, அன்னாரும் ஆய்வு செய்துள்ளார். இது குறித்து, மனுதாரர் தெரிவிக்கையில், முதல் ஒரு மணி நேர ஆய்விற்கு இலவசமாகவும், அதன் பின்னர் ஆய்வு செய்கிற ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூ.5/- வீதம் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும் - ஆனால் பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கும் ரூ.5/- வீதம் தன்னிடமிருந்து வசூலிக்கப்பட்டு, அதாவது அதிகமாக ரூ.15/- (ரூபாய் பதினைந்து மட்டும்) அதிகமாக வசூலிக்கப்பட்டுள்ளது என முறையிட்டார். மனுதாரரின் முறையீட்டினை பரிசீலனை செய்கையில், அம்முறையீடு சரியானது என ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, அதிகமாக ரூ.15/- வசூலித்த நடவடிக்கைக்காக, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.A.ரமேஷ், துணைப் பதிவுத்துறைத் தலைவர் (பொறுப்பு), திருநெல்வேலி மண்டலம் (தற்போது உதவிப் பதிவுத்துறைத் தலைவர், தேனி சரகம்) அவர்கள் மீது, சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. பொது அதிகார அமைப்பு/ துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், திருநெல்வேலி மண்டலம், மனுதாரருக்கு இழப்பீடு ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) அளிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிப்பதோடு, மனுதாரரிடமிருந்து அதிகமாக வசூலிக்கப்பட்ட தொகையினையும் மனுதாரருக்கு திரும்ப அளிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை முழுமையாக நிறைவேற்றி, அதற்கான நிறைவேற்றுகை அறிக்கை மற்றும் திரு.A.ரமேஷ், (தற்போது உதவிப் பதிவுத்துறைத் தலைவர், தேனி சரகம்) அவர்களிடமிருந்து பெறவிருக்கின்ற காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கம் ஆகியவற்றினைப் பெற்று அதனை 15/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். CP 2986/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1. பொதுத் தகவல் அலுவலர் /
துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
திருநெல்வேலி - 627 002.

2. திரு.A.ரமேஷ்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
தற்போது உதவிப் பதிவுத்துறைத் தலைவர்,
தேனி சரகம்)

**புகார்தாரர்**

திரு.க.நாகராஜு த/பெ.கணபதி
எண்.1/97, நடுத்தெரு
கொல்லங்கிணறு அஞ்சல்
ஒட்டநத்தம் - வழி
தூத்துக்குடி - 628 302
Phone:88259 27661.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
100, சாந்தோம் நெடுஞ்சாலை
பட்டினப்பாக்கம், சென்னை-600 028,

2.பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை-600 035.

RG/Sr.PC